சுருக்கம்

பள்ளிக் கல்வி – 2021 -22 ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களால் வெளியிடப்பட்ட அறிவிப்பு - 5 கஸ்தூரிபா காந்தி பெண்கள் உண்டு உறைவிடப் பள்ளிக் கட்டுமானம் மற்றும் இதர பணிகளை ரூ.764.56/- இலட்சம் செலவில் மேற்கொள்ள அனுமதி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வித் (அகஇ2) துறை

அரசாணை (நிலை) எண்.166 | நாள் 30.11.2021

திருவள்ளுவர் ஆண்டு 2052

பிலவ வருடம், கார்த்திகை 14

படிக்கப்பட்டது:–

மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களின் ந.க. எண். 454/ க.ப/ ஒபக /2021, நாள்: 09.11.2021.

---------

ஆணை :-

2021-22 ஆம் ஆண்டிற்கான பள்ளிக் கல்வித் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் 26.08.2021-ல் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

**20. கஸ்தூரிபா காந்தி பெண்கள் உண்டு உறைவிடப் பள்ளிகளைத் தரம் உயர்த்துதல்**

"கல்வியில் பின்தங்கிய 44 ஒன்றியங்களில் வசித்து வரும் சமுதாயத்தில் பின்தங்கிய பிரிவுகளை சார்ந்த 10 முதல் 14 வயதிற்குட்பட்ட மாணவியருக்குத் தரமான கல்வி வழங்கும் பொருட்டு 61 கஸ்தூரிபா காந்தி பெண்கள் உண்டு உறைவிடப் பள்ளிகள் நிறுவப்பட்டுள்ளன.

பெண் குழந்தைகளின் கல்வியை மேம்படுத்தவும், இடைநிற்றலைத் தடுக்கவும், கல்வியைத் தொடரவும், 5 உண்டு உறைவிடப் பள்ளிகள் ரூ. 8.00 கோடி மதிப்பீட்டில் தரம் உயர்த்தப்படும்"

2. மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் மேற்காண் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருவில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வித் திட்டத்தின் கீழ் தமிழகத்தில் 61 கஸ்தூரிபா காந்தி பெண்கள் உண்டு உறைவிடப் பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன என்றும், அவற்றுள், 5 பள்ளிகள் உயர்நிலை/மேல்நிலை வகுப்பு பெண் குழந்தைகள் அந்தந்த பள்ளியிலேயே

தங்கி பயன்பெறும் விதமாக, 2021-22ம் ஆண்டில் ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வியின் திட்ட ஒப்புதல் குழு கூட்ட குறிப்பில் தரம் உயர்த்தப்பட்டுள்ளன என்றும், அப்பள்ளிகள் அமைந்துள்ள மாவட்டம், ஒன்றியம், அமைவிடம், செயல்படும் வகுப்புகள் மற்றும் தங்கி பயில அனுமதிக்கப்பட்டுள்ள மாணவிகளின் எண்ணிக்கை ஆகியவற்றை பின்வருமாறு தெரிவித்துள்ளார்.

| வ. எண் | மாவட்டம் | ஒன்றியத்தின் பெயர் | கஸ்தூரிபா காந்தி பெண்கள் உண்டு உறைவிடப் பள்ளி அமைவிடம் | செயல்படும் வகுப்புகள் | அனுமதிக்கப் பட்டுள்ள மாணவிகள் எண்ணிக்கை | கட்டுமானப் பணிகள் மதிப்பீட்டுத் தொகை (இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|
| 1 | விழுப்புரம் | கள்ளகுறிச்சி | பாச்சேரி | VI-X | 130 | 94.71 |
| 2 | விழுப்புரம் | கள்ளகுறிச்சி | தரிசுக்காடு | VI-XII | 130 | 94.71 |
| 3 | விழுப்புரம் | ரிஷிவந்தியம் | வனபுரம் | VI-XII | 130 | 94.71 |
| 4 | ஈரோடு | டி.என்.பாளையம் | நஞ்சை புளியம்பட்டி | VI-XII | 130 | 94.71 |
| 5 | ஈரோடு | நம்பியூர் | சொக்குமாரி பாளையம் | VI-XII | 130 | 94.71 |
| | | | மொத்தம் | | 650 | 473.55 |

3. மேலும், மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்கள் தனது கருத்துருவில் இப்பள்ளிகளுக்கு, 2021-22 ஆண்டில் செலவினங்கள் மேற்கொள்ள மத்திய கல்வி அமைச்சக, திட்ட ஏற்பளிப்புக் குழுவால் தொடரா மற்றும் தொடரும் செலவினங்கள் தலைப்புகளின் கீழ் பின்வருமாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

| வ. எண். | செயல்பாடுகள் | நிதி ஒதுக்கீடு (இலட்சத்தில்) |
|---|---|---|
| | தொடரா செலவினம் | |
| 1. | புதிய கட்டிடம் கட்டுமான பணிகள் | 473.550 |
| 2. | தளவாடங்கள் / உபகரணங்கள் (சமையலறை உட்பட) | 3.000 |
| 3. | மாணவிகளுக்கான படுக்கைகள் | 4.000 |

| | | |
|---|---|---|
| | தொடரும் செலவினம் | |
| 4. | உணவு/ தங்கும் வசதிக்கான செலவினம் | 105.30 |
| 5. | ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள் அல்லாத பிற பணியாளர்கள் ஊதியம் | 141.00 |
| 6. | மாணவிகளுக்கான ஊக்கத் தொகை | 11.70 |
| 7. | கற்றல் கற்பித்தல், எழுது பொருட்கள் மற்றும் பிற கல்வி சார் பொருட்கள் | 3.25 |
| 8. | பள்ளி பராமரிப்பு | 5.00 |
| 9. | மருத்துவ பராமரிப்பு / சில்லறை செலவினம் | 9.75 |
| 10. | இதர செலவினம் | 2.50 |
| 11. | தற்காப்பு கலை பயிற்சி | 0.25 |
| 12. | குறிப்பிட்ட திறன் பயிற்சி | 0.26 |
| 13. | மின்சாரம்/ தண்ணீர் கட்டணம் | 5.00 |
| | மொத்த ஒதுக்கீடு<br>(தொடரும் மற்றும் தொடரா செலவினம்) | 764.56 |

மேற்கண்ட கருத்துருவின் அடிப்படையில், 2021-22 ஆம் கல்வியாண்டில் அனுமதி அளிக்கப்பட்டுள்ள 5 உண்டு உறைவிடப் பள்ளிக் கட்டுமானம் மற்றும் இதரப் பணிகளை ரூ. 764.56 இலட்சம் தொகையில் (தொடரும் மற்றும் தொடரா செலவினம் உட்பட) மேற்கொள்ள உரிய அனுமதி வழங்கிடுமாறு மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்கள் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

4. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் அறிவிப்பினை செயல்படுத்தும் பொருட்டு, மாநிலத் திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி அவர்களின் கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று, 2021-22 ஆம் கல்வியாண்டில் மத்திய கல்வி அமைச்சக, திட்ட ஏற்பளிப்புக் குழு ஒப்புதலின்படி தரம் உயர்த்தப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டுள்ள கீழ்காணும் 5 கஸ்தூரிபா காந்தி பெண்கள் உண்டு உறைவிடப் பள்ளிக் கட்டுமானம் மற்றும் இதர பணிகளை ரூ. 764.56 இலட்சம் (ரூபாய் ஏழு கோடியே அறுபத்து நான்கு இலட்சத்து ஐம்பத்து ஆறாயிரம் மட்டும்) செலவில் இப்பணிகளுக்குரிய மூலதனச் செலவினங்களுக்கான (Capital Expenditure) விரிவான மதிப்பீடுகள் ஒப்பந்தப் புள்ளி கோருவதற்கு முன்னர் தயாரிக்கப்பட வேண்டும் என்ற

நிபந்தனையுடன் இப்பணிகளை மேற்கொள்ள அனுமதி வழங்கலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

| வ. எ ண் | மாவட்டம் | ஒன்றியத்தின் பெயர் | கஸ்தூரிபா காந்தி பெண்கள் உண்டு உறைவிடப் பள்ளி அமைவிடம் | செயல்படும் வகுப்புகள் |
|---|---|---|---|---|
| 1 | விழுப்புரம் | கள்ளகுறிச்சி | பாச்சேரி | VI-X |
| 2 | விழுப்புரம் | கள்ளகுறிச்சி | தரிசுக்காடு | VI-XII |
| 3 | விழுப்புரம் | ரிஷிவந்தியம் | வனபுரம் | VI-XII |
| 4 | ஈரோடு | டி.என்.பாளையம் | நஞ்சை புளியம்பட்டி | VI-XII |
| 5 | ஈரோடு | நம்பியூர் | சொக்குமாரி பாளையம் | VI-XII |

(ஆளுநரின் ஆணைப்படி)

காகர்லா உஷா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
மாநில திட்ட இயக்குநர்,
ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி,
சென்னை-6.
நகல்:-
மாண்புமிகு பள்ளிக் கல்விஅமைச்சரின்
நேர்முக உதவியாளர், சென்னை-9.
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர்,
சென்னை-9
நிதி (கல்வி-II) துறை, சென்னை-9.
பள்ளிக் கல்வி (வரவு-செலவு) துறை, சென்னை-9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

30.11.2021

பிரிவு அலுவலர்

30/11/21